**பருத்தித்துறை நகர சபை**

**யாழ்ப்பாணம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 27 பெப்ரவரி 2020 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 15 யூலை 2020 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 30 ஆகஸ்ட் 2020 ஆந் திகதியும் தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் பருத்தித்துறை நகரசபையின் நிதி நிலைமையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான கணக்கீட்டுக் கொள்கை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்வருங்காலங்களில் நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டுக்கொள்கைகள் வெளிப்படுத்தப்படும். | நிதிக்கூற்றுக்களை தயாரித்தளித்தலுக்கான கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

**(ஆ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிர்மாணிக்கப்பட்ட 10 கட்டடங்களின் பெறுமதி ரூபா 7,499,716 ஆனது கட்டட கணக்குகளில் உள்ளடக்கப்படாததினால் மொத்த சொத்துக்களின் பெறுமதியானது நிதிக்கூற்றுக்களில் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது. | ரூபா 7,499,716 சொத்துக்களை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கட்டிடங்கள்யாவும் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | நகர சபை ஒழுங்கு விதி | | | |
| (i) | அத்தியாயம் (III) பிரிவு 54 (2) | வாடகை நிலுவை ரூபா 1,119,899 அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகளை செலுத்தாத குடியிருப்பாளருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நகர சபை ஒழுங்கு விதிக்கு அமைய வாடகைகள் அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ii) | அத்தியாயம் (III) பிரிவு 54 (3) | ஆதனவரி நிலுவை ரூபா 15,419,137 வினை செலுத்தத் தவறியோருக்கு பற்றாணைச் சீட்டு வழங்கப்பட்டிருக்கவில்லை. | ஆதனவரி செலுத்தாத வரியிருப்பாளருக்கு பற்றாணைச்சீட்டு வழங்கப்பட்டுள்ளது. | உரிய காலத்தில் நகர சபை ஒழுங்கு விதிக்கு அமைய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| | இலக்கம் 571 | ஒப்பந்தகாரர் பாதுகாப்பு வைப்புபணம் ரூபா 102,627 தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிடிபணம் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஒப்பந்தகாரர் பாதுகாப்பு வைப்புபணம் தொடர்பாக நிதி ஒழுங்கு விதிக்கமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 30,559,171 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 61,748,113 தொகையாக இருந்தது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது செலவினத்தை மிஞ்சிய வருமானம் ரூபா 31,188,942 ஆல் குறைவடைந்துள்ளது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2019 | | | 2018 | | |
|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 9,874,380 | 11,260,969 | 15,419,137 | 6,025,000 | 6,714,819 | 7,344,186 |
| வாடகைகள் | 10,521,300 | 10,500,540 | 1,313,824 | 10,600,000 | 9,897,279 | 1,281,268 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 634,000 | 863,090 | - | 572,000 | 691,215 | - |
| ஏனைய வருமானம் | 82,280,500 | 63,180,467 | 7,312,266 | 76,088,000 | 39,259,210 | 42,322,867 |
| | 103,310,180 | 85,805,075 | 24,645,227 | 93,285,000 | 56,562,523 | 50,948,321 |

### 2.2.2 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆதனவரி நிலுவை ரூபா 13,973,055 தொடர்பாக நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை செலுத்தாத வரியிறுப்பாளர்களுக்கு பற்றாணைச்சீட்டு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | ஆதனவரி நிலுவைகளை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 2.2.3 வியாபார அனுமதிப்பத்திரங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 71,296 ஆன பெறுமதியான விளம்பர பலகைகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தும், உரிமங்களிற்கான அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | மிகுதி தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | விளம்பரபலகை அனுமதி கட்டண நிலுவைகளை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 2.2.4 முத்திரைக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,955,490 தொகையான முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | முத்திரைக்கட்டண நிலுவைகளை உரிய காலத்தில் அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

நகர சபை கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

#### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நகர சபை கட்டளைச் சட்டத்தின் 157 பிரிவின் பிரகாரம், 15 முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | நகர சபை சட்டத்திற்கமைய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

#### (ஆ) திண்மக் கழிவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சுகாதாரத் தொழிலாளர்களுக்கு மேற்கொள்ள வேண்டிய மருத்துவ பரிசோதனைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 10 சுகாதாரத் தொழிலாளர்களிற்கான பூரண மருத்துவ அறிக்கை எமக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. | உரிய காலத்தில் தொழிலாளர்களுக்கான மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | உள்ளுராட்சி உதவியாளரினால் தயாரிக்கப்பட வேண்டிய அறிக்கைகள் உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாமையினால் நகர சபைக்குரிய முக்கிய பணிகள் நிறைவேற்றப்படாமல் இருந்தது. | உள்ளுாட்சி உதவியாளரினால் தயாரிக்கப்பட வேண்டிய 2020ம் ஆண்டிற்குரிய செயல் நடவடிக்கைத் திட்டம், பெறுகைத்திட்டம் ஆகியவை தயாரிக்கப்பட்டு உரிய காலத்திற்குள் தங்களுக்கு சமர்ப்பிக்கப்படும். | அறிக்கைகள் உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | பொதுமக்கள் சேவை பட்டயத்தினை காட்சிப்படுத்தியுள்ள போதும் அதில் குறிப்பிடப்பட்டதற்கு முரணாக மக்களுக்கு வழங்கப்பட்ட சேவைகள் காலம் தாழ்த்தியே வழங்கப்பட்டிருந்தது. | எம்மால் எதிர்பார்த்து வழங்கப்படும் கால அளவிலும் பார்க்க கூடுதலான காலம் தேவைப்படுகிறது. எனவே அதற்கமைய கால அளவு மாற்றியமைக்கப்பட உள்ளது. | மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய சேவைகள் உரியகாலத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | சபையினால் நகரசபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களின் அபிவிருத்தி நோக்கத்திற்கு பயன்படுத்தாது நிலையான வைப்பாக ரூபா 210,987,678 சபையினால் பேணப்பட்டு வருகின்றது. | வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. | சபைக்குரிய நிதியினை உரிய காலத்தினுள் அபிவிருத்தி தேவைக்கு பயன்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஈ) | ரூபா 253,454 பெறுமதியான பொருத்துக்கள் தளபாட பொருத்திகள் நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்படாது இருப்புக்கணக்கினுள் உள்ளடக்கப்பட்டதினால் அதே பெறுமதியினால் இருப்பு அதிகரித்துக் காணப்படுகின்றது. | பிளாஸ்ரிக்கிலான சிறிய கடை (Fiber Glass Sale Outlet) பொருட் பதிவேட்டில் இருந்து நீக்கி பொருத்திகள் பதிவேட்டின் பக்க இலக்கம் 20 இற்கு 2020 ஆம் ஆண்டில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. | பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையானது உரியவாறு மனித வளத்தைப் பெற்று ஈடுபடுத்தாமையினால் அத்தகைய 20 மனிதவளங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் தாமதமடைந்துள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதிக்காக சபையால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அனுமதி கிடைக்கப்பெற்றதும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | பதவி வெற்றிடங்களை உரியகாலத்தில் நிரப்புவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வருடாந்தம் சபையினால் ஆதன உரிமையாளர்களுக்கு K படிவம் வழங்கப்பட வேண்டியபோதிலும் 2019 ஆம் ஆண்டில் 3,804 ஆதனங்களுக்கு K படிவம் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை | K படிவம் வழங்கப்பட வேண்டிய வரியிறுப்பாளர்கள் குடியிருப்பதனால் நேரடியாகக் கையளிக்க முடியவில்லை. | ஆதன வரி நிலுவையினை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை உரிய காலத்தினுள் எடுக்கப்படல் வேண்டும். |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தண்ணீர் பௌசரையும் இரண்டு சில்லு உழவு இயந்திரத்தினையும் திருத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | வாகனங்களிற்கு பராமரிப்பு மற்றும் திருத்தங்கள் உரிய காலத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**3.5.2 சுவீகரிக்கப்படாத சொத்து**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சபையானது 10 எண்ணிக்கையான காணிகளுக்கு உரிமை மாற்றப்பட்டிருக்கவில்லை. | உரிமை மாற்றம் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | காணிகளிற்கான உரிமையை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | ரூபா 212,226,468 பெறுமதியான காணி கட்டடத்திற்கான உரிமை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணி உரிமைச்சான்றிதழ் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | காணி கட்டடத்திற்கான உரிமையினை மாற்றுவதற்கு உரிய காலத்தினுள் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.5.3 விளைவற்ற சொத்து

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | தண்ணீர் தாங்கி வாகனம் ஒன்று முழுமையாகத் துருப்பிடித்து பயன்படுத்தப்படாத நிலையில் காணப்படுகின்றபோதும் இதற்கான உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இத்தண்ணீர் தாங்கியினை ஏலத்தில் விற்பனை செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | பயன்படுத்த முடியாத வாகனங்களை அகற்றுவதற்கு உரிய காலத்தினுள் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | சுபையினால் நிர்மாணிக்கப்பட்ட 07 கடைகளும் இதுவரை வாடகைக்கு விடப்படவில்லை. | 07 கடைகளும் கிருமிநீக்கம் செய்வதற்கு வசதியாக பொருட்களை களஞ்சியப்படுத்தப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. | கடைகளை வாடகைக்கு விடுவதற்கு உரிய நடவடிக்கைகள் உரிய காலத்தினுள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் பாதீட்டின் செலவுகளுக்கும் உண்மையான செலவுகளுக்கும் கணிசத்தன்மையான வேறுபாடு காணப்படுவதனால் இது ஒரு வினைத்திறனற்ற பாதீடாக காணப்பட்டுகிறது. | வெற்றிடமான ஆளணிக்கான வேதனம் 2019 ஆம் ஆண்டு பாதீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை. எதிர்பார்த்த பயணச் செலவுகள் இடம்பெறவில்லை. | பாதீட்டினை சரியான முறையில் திட்டமிடுவதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |